[2004 பிப்ரவரி 5

3–

கோயில் திருப்பணி

***20482–திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பெரணமல்லூர் புராதன சிவன் கோயிலைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படுமா?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரணமல்லூர் அருள்மிகு கரையீஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லாததால், திருப்பணிக் குழு அமைத்து பொது மக்கள் நன்கொடை வசூல் செய்யவும், உபயதாரர் மூலம் பணி மேற்கொள்ளவும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, திருக்கோயிலைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அன்னதானத் திட்டம், ஒரு கால சிறப்பு பூஜை, ஆலயங்கள்தோறும் புனரமைத்தல், இவற்றின் காரணமாக சோழர்களின் பொற்கால ஆட்சிக்கு இணையாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி நடக்கிறது. பெரணமல்லூர் புராதனக் கோயிலான ஸ்ரீ கரையீஸ்வரர் திருக்கோயிலை, பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து அதன் மூலமாகச் செப்பனிடுவதற்குக் காலதாமதமாகும். பெரணமல்லூர் சிவன் கோயிலைச் செப்பனிடுவதற்கு, திட்டச் செலவு சுமார் 15 இலட்சம் ரூபாய் அளவிலே ஆகும். எனவே, அதிக நிதி வருவாய் உள்ள திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில் நிதியிலிருந்து அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் அருள்மிகு கரையீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய

2004 பிப்ரவரி 5]

அறநிலைய ஆட்சித் துறை ஆலயங்கள் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிர்வாகத்தில், திரு. என். இராமமூர்த்தி, தபெ. திரு. நடேச முதலியார் என்பவர் பரம்பரை அல்லாத அறங்காவலராக இருந்து வருகிறார். ஆலயத்திற்குச் சொந்தமாக 80 சென்ட் நிலம் மட்டும்தான் உள்ளது. வருடத்திற்கு 660 ரூபாய் மட்டும்தான் வருவாய் வருகிறது. எனவே, அந்த ஆலயத்தினுடைய நிதியிலிருந்து எடுத்துச் செய்ய வசதியில்லை. வேறு வசதி படைத்த ஆலயத்திலேயிருந்தும், அங்கே இருக்கின்ற வசதி படைத்த நன்கொடையாளர்களிடமிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வசூல் செய்தால், அதன் மூலமும்—இப்போது தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு 2,822 ஆலயங்கள் பொது மக்கள் மூலமாகவும், அறநிலையத் துறையின் மூலமாகவும் செய்யப்பட்டதைப்போல, இந்த ஆலயத்திலும்—திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1991 முதல் 1996 வரை இருந்தபோதும், 2001 முதல் தொடங்கி இப்போது நடந்து வருகின்ற நிலையிலும், தமிழகத்திலேயுள்ள பல்லாயிரக்கணக்கான கோயில்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு, குடமுழுக்குச் செய்யப்பட்டு, ஒரு கால பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அந்தந்தக் கோயில்களிலே அன்னதானம் வழங்கப்பட்டு மிகவும் சீரும் சிறப்புமாக நடந்து வருகிறது. வேலூர் மாவட்டத்திலே உள்ள மிகவும் புராதனமான, பழமையான பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்படாமலேயே இருக்கிறது. அந்தக் கோயில் உலகப் பிரசித்தி பெற்ற கோயில். காரணம் என்னவென்று சொன்னால், ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் வருகின்ற வைகுண்ட ஏகாதசி தினத்தன்று இந்தியா பூராவிலிருந்தும்கூட அந்தக் கோயிலுக்கு பக்தர்கள் வருகை தருகிறார்கள். ஸ்பெஷல் சர்வீஸ் பஸ்கள்கூட ஏற்பாடு செய்யப்படுகின்றன. அந்த வகையிலே மிகவும் புராதனம் பெற்ற கோயில். புண்டரீக மகரிஷிக்குக் காட்சி கொடுப்பதற்காக வெங்கடேசப் பெருமாள், ஆவுடையார் மேலே நின்றதாக ஒரு உருவ அமைப்பு, அந்த பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திலே உள்ளது. அப்படிப்பட்ட ஆலயம் நீண்ட நெடுங்காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல், சீர்கேடடைந்த

நிலையில் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னாலே சில பெரியோர்கள் நிதி உதவி அளித்தார்கள். அந்த வகையிலே நானும்கூட 50,000/– ரூபாயினை அந்தத் திருக்கோயிலுக்கு அளித்து ஒரு மண்டபத்தைப் புனரமைப்புச் செய்ய ஏற்றுக் கொண்டிருக்கிறேன். கடந்த 4 மாதங்களுக்கு முன்னாலே காஞ்சிப் பெரியவர் அவர்கள் அந்தக் கோயிலுக்கு வருகை தந்து, அக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், கடந்த 2 வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திருப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல், போதிய நிதி ஆதாரம் இல்லாமல் கிடப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தத் திருக்கோயிலின்மீது கவனம் செலுத்தி, இந்தத் திருக்கோயிலில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யவேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நலிவுற்றிருக்கின்ற அனைத்து ஆலயங்களும் தேர்வு செய்யப்பட்டுத்தான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,822 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்—வைத்திருக்கின்ற கோரிக்கை—பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இன்னும் அந்தப் பணிகள் முடிவடையவில்லை என்று சொன்னார்கள். கூடிய விரைவில் அந்தத் திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

4–

அருள்மிகு முருகன் திருக்கோயில்

***38860–திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—